முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1405

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.08.2023**, வெள்ளிக்கிழமை

1. மகாசக்தியே அரங்கா வாழ்க
   மாதவசியே தேசிகா வாழ்க
   ஜெகத்தை ஆளும் தொண்டர் படைகளை
   சித்திமிகு சீடர்களாகக் கொண்ட அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 19 ம் நாள், 04.08.2023, வெள்ளிக்கிழமை)
   ஊழ்போக்கி உலக மக்களை மீட்க
   உயர்வான சங்கம் படைத்த அரங்கனே
3. அரங்கனே உன் சன்மார்க்கம்
   இந்த உலகை ஆளும்
   உயர்வான உன் சங்கங்களே
   உலகமெல்லாம் தர்மம் பெருக்கி
4. வகையான வளமான நல்பூமிபடைத்து
   வையகத்தில் ஞான ஆட்சித்தரும்
   தருகவே அரங்கன் தருகின்ற உயர்ஞானமே
   தரணிக்கு சர்வ பாதுகாப்பாய் நின்றருளும்
5. வரமென அரங்கன் தொடர்புகொண்டால்
   வையகத்தில் வாழும் மக்களுக்கு
   ஆறுமுகன் என் அருள் பலம் பெறுவதோடு
   அழியாமை பெற்று உலகோர் பெருவாழ்வு காணநேரும்
6. நேர்மைபட அரங்கன் தொடர்பு கூட்டி
   நிலவுலகில் தர்மம் செய்து கொண்டு
   உலக வறுமைபோக்கும் வல்லமைபட
   உயிர்கொலை செய்யாது அரங்கன் வழி

7. வழிதனில் தொடர்ந்து சன்மார்க்க
வல்லமை கூட்டி எங்கும் வருதல் காண
இடரின்றி இந்த பேருலகம் இனிதே ஞான லோகமாக
இணையில்லாத ஞான யுகமாகவும் மாற்றம் கண்டு சிறக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—